FIRST INFORMATION REPORT — TAMIL NADU POLICE
முதல் தகவல் அறிக்கை — INTEGRATED INVESTIGATION FORM I

(Under Section 154 Cr.P.C.) Under Section 173 BNSS C 8069077
(குற்ற வி.தொ பிரிவு 154 இன் கீழ்)

1. District : DVAC Chennai — PS: Chennai city III — Year: 2026 — FIR No: 01 — Date: 06.07.2026
மாவட்டம் — காவல்நிலையம் — ஆண்டு — முத.அ எண் — நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption — Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Act 1988 [As amended in 2018] — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: BNSS — Sections பிரிவுகள்: 106 [Sec. 102 CrPC]
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 03.07.2026 Date to : 04.07.2026
குற்ற நிகழ்வு நாள் — நாள் முதல் — நாள் வரை
Time Period : Time from : 16.00 Hrs Time to : 00.30 Hrs.
நேர அளவு — நேரம் முதல் — நேரம் வரை
(b) Information Received at PS. Date : 04.07.2026 Time : 18.30 Hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் — நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — நேரம்

4. Type of Information : Written/ Oral : Written typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Around 9 KMS. North East
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : Greater Chennai Corporation Zone-9, at No.1, 4th Cross Street, Nungambakkam, Chennai-600034.
முறைக் காவல் எண் — முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr.N. Soundararajan (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : Indian (e) Passport No :
நாள் / பிறந்த ஆண்டு — நாட்டினம் — வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் — வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Taluk Excise Office, Velachery Taluk, Chennai-600113. Address : Chennai District Inspection Cell O/o Chennai Collectorate, Chennai-1.
தொழில் — முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
(1) Tr. Sri Ramalu, Superintendent (Accounts), Zone-9, Greater Chennai Corporation, Nungambakkam, Chennai
(2) Tr. A. Manjeer Hussain, Sanitary officer, Unit-27, Health Department
(3) Tr. R. Kothandan, Conservancy Supervisor, Unit-26, Greater Chennai Corporation
(4) Tr. R. Rajamanickam, Civil work contractor (Pvt. Individual)
(5) Tr. K. R. Hemraj Kumar, Civil work contractor (Pvt. Individual)

8. Reasons for delay in reporting by the complainant / informant :
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையீட்டில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— No delay —

* GCP-240-34(Type-2) 90,000 Cps -2T 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவுப்போன / சம்பந்தமான சொத்துக்களின் விபரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved Cash of Rs. 139800/=
களவுப்போன / சம்பந்தமான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any —
பிணவிசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு வழக்கு எண்ணும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the investigation / Refused investigation / transferred to PS ..... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறைப்பிலிருந்து உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்பட்டார் ..... பதவி ..... நிலை அதிகாரியின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / அதிகாரம் எல்லைக்குட்பட்ட புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டது

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறைப்பட்டாருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஒத்துக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Informed to the Complainant

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறைப்பட்டார் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

04.07.2026

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

S. Kllinayagam 04.07.2026
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: (S. VALLINAYAGAM)
Rank: நிலை INSPECTOR OF POLICE No.
VIGILANCE & ANTI-CORRUPTION
CC-III UNIT
CHENNAI-600 016.

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Chennai City-III
Alwarpet, Chennai-600 016

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை நகரப்பிரிவு-3 குற்ற எண்.01/2026 சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 மற்றும் BNSS பிரிவு-106 (பிரிவு 102 Cr.P.C.) வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12யின் தொடர்ச்சி பின்வருமாறு

சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.ராமச்சந்திரன் அவர்களின் செயல்முறை எண்.98/INSPN/2026, நாள் 03.07.2026 உத்தரவின்படி சென்னை மாவட்டம், வேளச்சேரி வட்டம், வேளச்சேரி வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்ட கலால் அலுவலராக பணியாற்றும் திரு.ந.சௌந்தரராஜன் அவர்களும் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3 துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் அவரது குழுவினர் ஆகியோர் இணைந்து சென்னை-34, நுங்கம்பாக்கம் ஏரிக்கரை பகுதி, 4-வது குறுக்கு தெரு, நெ.1-ல் இயங்கி வரும் மண்டலம்-9, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டு தணிக்கை தொடர்பாக மேற்சொன்ன வட்ட கலால் அலுவலர்/சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.ந.சௌந்தரராஜன், அவர்கள் 04.07.2026ந்தேதியிட்ட அளித்த புகார் மனுவின் மீது மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, புகார் மனுவின் சாரம்சம் குறித்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை உயர் அதிகாரியிடம் தெரிவித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய ஒப்புதல் பெறப்பட்டது. அதனை தொடர்ந்து, திருமதி.வீ.தமிழ்மணி, துணை காவல் கண்காணிப்பாளர், சென்னை நகரப்பிரிவு-3, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,சென்னை-16 அவர்கள் வட்ட கலால் அலுவலர், வேளச்சேரி வட்டாட்சியர் அலுவலகம் / சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் கொடுத்த புகார் மனு தொடர்பாக வழக்குப்பதிவு செய்ய அறிவுறுத்தியதின் பேரில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை

நகரப்பிரிவு-3 குற்ற எண்.01/2026 சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 மற்றும் BNSS பிரிவு-106 (பிரிவு 102 Cr.P.C.) ஆகிய பிரிவுகளின் கீழ் இன்று 06.07.2026ந்தேதி காலை 11.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர் திரு.ந.சௌந்தரராஜன், வட்ட கலால் அலுவலர், வேளச்சேரி வட்டாட்சியர் அலுவலகம், சென்னை பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர், சென்னை நகரப்பிரிவு-3, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16. கடித எண்.Inspection/01/2026 நாள் 04.07.2026 அய்யா, பொருள் - இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை - சென்னை-34, நுங்கம்பாக்கம், ஏரிக்கரை பகுதி, 4-வது குறுக்கு தெரு, நெ.1-ல் இயங்கி வரும் மண்டலம்-9 தேனாம்பேட்டை, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு தணிக்கை நாள் 03.07.2026 மற்றும் 04.07.2026 - ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் ஆகிய நான் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3, துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் அவரது குழுவினர் இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை இன்று 03.07.2026ந்தேதி மாலை 4 மணி முதல் 04.07.2026ந்தேதி 00.30 மணிவரை சென்னை-34, நுங்கம்பாக்கம், ஏரிக்கரை பகுதி, 4-வது குறுக்கு தெரு, நெ.1-ல் இயங்கி வரும் மண்டலம்-9, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டு தணிக்கையின் போது கணக்கில் வராத பணம் ரூ.1,39,800/- கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் கூட்டு சோதனையின் போது தயார் செய்யப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கை செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் பணம் ரூ.1,39,800/- இத்துடன் பெறப்பட்ட மேற்சொன்ன அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களின் வாக்குமூலங்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களின்

வாக்குமூலங்கள் ஆகியவை உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது. மேற்படி இருதுறை கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள ஒப்பம் 04.07.2026 துணை ஆய்வுக்குழு அலுவலர், சென்னை மாவட்டம் TALUK EXCISE OFFICER, VELACHERY TALUK CHENNAI-600 113 இணைப்பு- மேற்கண்டவாறு Forwarded to Inspector of Police, CC-III, V&AC for necessary action Sd/-xx V.Thamizhmani 04.07.2026 Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, Chennai City-III, Alandur, Chennai-600 016. Sir, Received this complaint on 04.07.2026 and after getting concurrence from the higher officials, this day (04.07.2026) at 18.30 hrs, I am registering a case in V&AC Chennai City-III Crime No.01/AC/2026/CC-III U/s 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018 and Section 106 of BNSS (Section 102 Cr.P.C.) and taken up for investigation Sd/-(S.VALLINAYAGAM), Inspector of Police, Chennai City-III Unit, Vigilance & Anti-Corruption, 04.07.2026.

திடீர் கூட்டு தணிக்கை செயல்முறை நடவடிக்கை

சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.ராமச்சந்திரன் அவர்களின் செயல்முறை எண்.98/INSPN/2026, நாள் 03.07.2026 உத்தரவின்படி சென்னை மாவட்டம், வேளச்சேரி வட்டம், வேளச்சேரி வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்ட கலால் அலுவலராக பணியாற்றும் திரு.ந.செளந்தரராஜன் அவர்களும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3, துணை காவல் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினர் ஆகியோர் இணைந்து, இன்று 03.07.2026-ந்தேதி மாலை 16.00 மணியளவில் சென்னை-34, நுங்கம்பாக்கம், ஏரிக்கரை பகுதி, 4-வது குறுக்கு தெரு, நெ.1-ல் இயங்கி வரும் மண்டலம்-9, பெருநகர சென்னை

மாநகராட்சி அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டு தணிக்கை அறிக்கையின் விவரம் பின்வருமாறு.

இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்	திரு. ந.சௌந்தரராஜன், துணை ஆய்வுக்குழு அலுவலர்/ வட்ட கலால் அலுவலர், வேளச்சேரி வட்டாட்சியர் அலுவலகம், வேளச்சேரி வட்டம், சென்னை மாவட்டம்.
	திருமதி.வீ.தமிழ்மணி, துணை காவல் கண்காணிப்பாளர், சென்னை நகரப்பிரிவு-3, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16.
	திரு.வள்ளிநாயகம், காவல் ஆய்வாளர், சென்னை நகரப்பிரிவு-3, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16.
	திருமதி. அ.சமீனா பானு, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வுப்பிரிவு-2, ஆலந்தூர், சென்னை - 600 016.

சென்னை-34, நுங்கம்பாக்கம், ஏரிக்கரை பகுதி, 4-வது குறுக்கு தெரு, நெ.1-ல் இயங்கி வரும் மண்டலம்-9, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் பணியாற்றும் முதுநிலை வருவாய் அலுவலர்கள், அந்த அலுவலகத்தின் பல்வேறு பிரிவுகளில் பணியாற்றும் இதர அலுவலர்கள், மண்டலம்-9, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் அவர்களுக்கான உரிய அரசுப்பணியை செய்வதற்கு லஞ்சம் வாங்குவதாக கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் அடிப்படையில் சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலருக்கு தகவல்

தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, அவரது பரிந்துரையின் பேரில் சென்னை மாவட்டம், துணை ஆய்வுக்குழு அலுவலர்/ வட்ட கலால் அலுவலர், வேளச்சேரி வட்டாட்சியர் அலுவலகம், வேளச்சேரி வட்டம் ஆகிய நான் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3, துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர் தலைமையிலான குழுவினருடன் இணைந்து மேற்சொன்ன சென்னை-34, நுங்கம்பாக்கம், ஏரிக்கரை பகுதி, 4-வது குறுக்கு தெரு, நெ.1-யில் இயங்கி வரும் மண்டலம்-9, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் இன்று 03.07.2025-ந்தேதி மாலை 16.00 மணியளவில் இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2) சென்னை-34,நுங்கம்பாக்கம், ஏரிக்கரை பகுதி, 4-வது குறுக்கு தெரு, நெ.1-ல் இயங்கி வரும் மண்டலம்-9, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகமானது வடக்கு தெற்காக செல்லும் 30 அடி தெருவில் மேற்கு பக்கத்தில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. மேற்படி கட்டிடத்தின் தரைத்தளத்தில் உள்ள நுழைந்தவுடன் வரண்டாவும், அதற்கு இடது பக்கத்தில் முதல் தளத்திற்கு செல்லும் படிக்கட்டுகளும், அதனை அடுத்து மின்துறை அலுவலகம் அமைந்துள்ளது. அதற்கு அடுத்து பிரதான அலுவலகத்தில் உள்ளே நுழைந்ததும் வலது பக்கத்தில் வடக்கு பக்கத்தில் முதலில் Account section, அதனை தொடர்ந்து Revenue Department section, Conservancy Section, Petition Section, Admin Section, Health Section, மற்றும் Engineering Section காணப்பட்டன. மேலும் நுழைவாயிலுக்கு எதிர்புறத்தில் வலது பக்கத்தில் முதலில் கணக்கு அலுவலர் அறையும், அதனை தொடர்ந்து சுகாதார அலுவலர் அறையும், அதனை தொடர்ந்து மூன்று முதுநிலை வருவாய் அலுவலர்கள் அறையும், அதனை தொடர்ந்து ஒரு நிர்வாக அலுவலர் அறையும் உள்ளது. அதனை தொடர்ந்து கழிப்பறைக்கு செல்லும் வழியும், அதனை தொடர்ந்து சுகாதார பிரிவு Data Entry Operater அறையும், அதனை தொடர்ந்து மண்டல சுகாதார அதிகாரி அறையும், அதற்கு எதிரில் நகர திட்டம்

அலுவலகம் காணப்பட்டது. அதனை தொடர்ந்து முதல் தளத்தல் உள்ளே நுழைந்ததும் Conservancy Data Entry அறையும், அதனை தொடர்ந்து மண்டல அலுவலக கட்டுபாட்டு அறையும், அதனை தொடர்ந்து உதவி ஆணையாளர் மண்டலம்-9 அவர்களின் அறையும், அதனை தொடர்ந்து இரண்டு உதவி செயற்பொறியாளர்கள் அறையும், அதனை தொடர்ந்து உதவி செயற்பொறியாளர்கள் அலுவலகத்திற்கு எதிரில் Engineering Section Data Entry அறையும் காணப்பட்டது. அதனை தொடர்ந்து இரண்டாம் தளத்தில் உள்ளே நுழைந்ததும் மண்டலம்-9-ன் குழு தலைவர் அறையும், அதற்கு பின்புறம் Server அறை மற்றும் மாநில உள்ளாட்சி தணிக்கைத்துறை அறையும் காணப்பட்டது. 3) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-9 அலுவலகத்தின் முதுநிலை வருவாய் அலுவலர் அறையின் உள்ளே இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் திருநாவுக்கரசு என்றும் இந்த அலுவலகத்தில் முதுநிலை வருவாய் அலுவலராக பணிபுரிவதாக தெரிவித்தார் அவரிடம் சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.ந.சௌந்தரராஜன் ஆகிய நான் என்னையும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3 துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் அவரது குழுவினரையும், அறிமுகம் செய்து கொண்டு, சென்னை-34, நுங்கம்பாக்கம், ஏரிக்கரை பகுதி, 4-வது குறுக்கு தெரு, நெ.1-ல் இயங்கி வரும் மண்டலம்-9, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் திடீர் சோதனை செய்ய உள்ளதை தெரிவிக்கப்பட்டது. மேற்படி அலுவலகமானது இரண்டு தளம் கொண்ட கிழக்கு நோக்கிய கட்டிடத்தில் தரைத்தளத்தில் உள்ளே நுழைந்ததும் வரண்டாவுக்கு இடதுபுறத்தில் உள்ள அறையில் மின்துறை பிரிவு செயல்பட்டு வருகிறது. அங்கு முதலில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் மோகனசுந்தரி என்றும் அவர் மேற்படி பிரிவில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணம் குறித்து கேட்டபோது தனது கைப்பையிலிருந்து சொந்த பணம் என்று எடுத்து ஆஜர்

செய்ததை விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு பணம் ரூ.420/-யை அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. 4) மேலும் அதனை தொடர்ந்து அடுத்து இருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் சந்திரசேகர் என்றும் அவர் மேற்படி பிரிவில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணம் குறித்து கேட்டபோது தனது சட்டை மேல் பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிபார்த்தபோது பணம் ரூ.6,000/- இருந்தது. இது குறித்து விளக்கம் கேட்டபோது தனது தாயரின் மருத்துவ செலவிற்காகவும் மருந்து வாங்குவதற்காகவும் கொண்டுவந்துள்ளதாக கூறியதால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்படி ரூ.6,000/-யை அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. அடுத்த இருக்கையில் இருந்த நபரை விசாரித்தபோது, அவர் தனது பெயர் சந்தீப் என்றும் அவர் மேற்படி பிரிவில் Skilled Assistant Gr-II-வாக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணம் குறித்து கேட்டபோது தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணி பார்த்தபோது பணம் ரூ.1,070/- இருந்தது. இது குறித்து விளக்கம் கேட்டபோது தனது சொந்த செலவிற்கு எடுத்து வந்திருந்ததாக கூறியதால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்சொன்ன பணம் ரூ.1,070/-யை அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அடுத்த இருக்கையில் இருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் அனுராதா என்றும் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணம் குறித்து கேட்டபோது தனது கைப்பையில் இருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிபார்த்தபோது பணம் ரூ.4,500/- இருந்தது. இது குறித்து விளக்கம் கேட்டபோது தனது வீட்டின் மளிகை பொருட்கள் வாங்குவதற்காக கொண்டுவந்துள்ளதாக கூறியதால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் ரூ.4,500/-யை அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. 5) மேற்படி அலுவலகத்தின் பிரதான வாசல் கிழக்கு நோக்கியதாகவும், இரண்டு தளங்கள்

கொண்டதாகவும் காணப்படுகிறது. தரைத்தளத்தின் உள்ளே நுழைந்ததும், எங்களது சோதனை குழுவினரை பார்த்ததும் ஒரு நபர் அவசர அவசரமாக, அவர் நின்றிருந்த இடத்திற்கு அருகே கிழக்கு நோக்கி உள்ள இரும்பு ரேக்கில் அலுவலக கோப்பிற்கு இடையில் பணத்தை பதுக்கி வைக்க முயற்சித்தார். அந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் ஸ்ரீராமுலு என்றும், கணக்குப்பிரிவு கண்காணிப்பாளர் ஆக மண்டலம்-9, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும் அவர் தனது இருக்கை மேற்சொன்ன அந்த இரும்பு ரேக்கிற்கு எதிரே உள்ளது எனவும் தெரிவித்தார். பின்னர் சோதனை குழுவினரின் அறிவுரைப்படி அவர் அந்த இரும்பு ரேக்கில் அலுவலக கோப்பிற்கு இடையே அவர் வைத்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் ஐநூறு ரூபாய் நோட்டுக்களாகவும், (Rs.500X15=Rs.7500) மடித்த நிலையிலும் காணப்பட்டது. இந்த பணம் ரூ.7,500/- குறித்து அவரிடம் கேட்டபோது அவர் பதட்டமடைந்தும், பதில் எதுவும் கூறாமல் தலை குனிந்தவாறு மௌனமாக இருந்ததால், அந்த பணம் ரூ.7,500/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 6) மேற்சொன்ன நபரான ஸ்ரீராமுலு என்ற நபரை விசாரித்து கொண்டிருந்தபோது, மற்றொரு நபர் வேகமாக அந்த பெரிய அறையில் இருந்து தெற்கு பக்கம் உள்ள கதவை திறந்தவாறு மற்றொரு பகுதிக்கு சென்றவரை, அந்த பகுதிக்கு சோதனை குழுவினரின் உதவியுடன் சென்ற போது, அந்த நபர் மற்றொரு நபரான பெண் அலுவலரிடம் பொது சுகாதாரத்துறை அதிகாரி டாக்டர்.ஆஷா லதா என்பவரின் அலுவலக அறைக்கு முன்பு வைத்து வலுக்கட்டாயமாக அந்த பெண் அலுவலரிடம் பணத்தை கத்தையாக திணிக்க முயற்சி செய்து கொண்டிருந்தார். எங்களது சோதனை குழுவினரை கண்டதும் கத்தையாக வைத்திருந்த பணத்தை அவசர அவசரமாக தனது இடது பக்க பேண்ட் உள்ளே திணித்து கொண்டார். சோதனை குழுவினரின் உதவியோடு அந்த நபரை மடக்கி விசாரித்தபோது, அவர் தனது பெயர் மன்சூர் உசேன் என்றும், மண்டலம்-9 பெருநகர சென்னை மாநகராட்சி,

பொது சுகாதாரத்துறையில் சுகாதார அலுவலராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது, அவர் தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை இரண்டு பகுதிகளாக காணப்பட்டது மற்றும் அதை எண்ணி பார்த்தபோது பணம் ரூ.38,000/- (Rs.500X24 ; Rs.500X52 = Rs.38,000/-) காணப்பட்டது. அந்த பணம் குறித்து கேட்டபோது, அவர் மண்டலம்-9 பெருநகர சென்னை மாநகராட்சி பகுதி-27 அலுவலகத்திற்கு மார்ச் மாதம் தேவையான Butter Milk வாங்கியது தொடர்பாக Transportation Charges ஆக பணம் ரூ.26,500/- செலவு செய்திருந்ததாகவும், அது தொடர்பாக இந்த மண்டலம்-9 அலுவலகத்தில் சம்பந்தப்பட்ட பொது சுகாதாரத்துறையின் அலுவலர் திருமதி.அனுசுயா, உதவியாளர் அவர்களிடமிருந்து இன்று ரொக்கமாக பணம் ரூ.26,500/- பெற்றதாக தெரிவித்தார். மீதமுள்ள பணம் ரூ.11,500/- குறித்து திரு. மன்சூர் உசேன் அவர்களிடம் கேட்டவுடன், அவரது முகம் வியர்த்த நிலையில் பதில் எதுவும் கூறாமல் மௌனமாக இருந்தார். எனவே அந்த பணம் ரூ.11,500/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்சொன்ன திரு. மன்சூர் உசேன் பணத்தை வலுக்கட்டாயமாக ஒரு பெண் அலுவலரிடம் திணிக்க முயன்றது தொடர்பாக, அந்த பெண் அலுவலரை விசாரித்தபோது அவர் தனது பெயர் ரஞ்சனி என்றும், Data Entry Operator ஆக பொது சுகாதாரத்துறையில் மண்டல சுகாதாரத்துறை அதிகாரி டாக்டர் ஆஷாலதா என்பவரின் அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும் அவர் திரு.மன்சூர் உசேன் என்பவர் தன்னிடம் பணத்தை வலுக்கட்டாயமாக அவசர கதியில் திணிக்க முயன்றதாக தெரிவித்தார். 7) மேலும் அனைத்து விதமான துறைகள் அடங்கிய அந்த விசாலமான அறையின் Accounts Section நோக்கி இரண்டு நபர்கள் செல்ல முயற்சித்தனர். அந்த இரண்டு நபர்களையும் சோதனை குழுவினர் உதவியுடன் மடக்கி விசாரித்தபோது ஒரு நபர் தனது பெயர் ராஜ மாணிக்கம் என்றும், M/s.SR Contractors என்ற பெயரில் சிவில் ஒர்க் சம்பந்தமாக அலுவலகம் சென்னை

வடபழனியில் உள்ளதாகவும், அரசு கட்டிடங்கள் பழுது பார்ப்பது தொடர்பான சிவில் ஒர்க் பணிகளை செய்து வருவதாகவும், தான் இந்த நிறுவனத்தில் ஒரு பார்ட்னர் என்றும் மற்றொரு பார்ட்னர் திரு.சீனிவாசன் என தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது தனது இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்ததை எண்ணி பார்த்தபோது பணம் ரூ.31,000/- (Rs.500X62) இருந்தது. அந்த பணம் குறித்து கேட்டபோது, சரியான விளக்கம் அவரால் அளிக்க முடியவில்லை எனவே அந்த பணம் ரூ.31,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்சொன்ன நபருடன் சென்ற மற்றொரு நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் Hemant Kumar என்றும், தனது பெயரிலே சிவில் ஒர்க் சம்பந்தமான பணிகளை செய்து வருவதாகவும், அரசு கட்டிடங்களை பழுது பார்ப்பது, தற்போது தனது நிறுவனம் மூலம் தமிழக அரசுக்கு சொந்தமாக சென்னை மயிலாப்பூர், சாரதாபுரம் அருகே Multi purpose building புதிதாக கட்டியுள்ளதாகவும், மேலும் தற்போது சென்னை மெரினா நீச்சல் குளம் சிவில் ஒர்க் சம்பந்தமாக பழுது பார்க்கும் பணியை செய்து வருவதாகவும், மேலும் மயிலாப்பூரில் சுடுகாடு தகன மேடை அருகே புதிதாக சிவில் ஒர்க் தொடர்பாக Shed அமைக்கும் பணியை செய்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது, அவர் தனது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்ததை எண்ணி பார்த்தபோது பணம் ரூ.76,100/- (Rs.500X50; Rs.500X100; Rs.100X11) இருந்தது. அந்த பணம் குறித்து கேட்டபோது, சரியான விளக்கம் அவர் அளிக்கவில்லை. எனவே அந்த பணம் ரூ.76,100/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 8) அதனை தொடர்ந்து பிரதான அலுவலகத்தில் உள்ளே நுழைந்ததும் இடது பக்கத்தில் உள்ள Engineering பிரிவு அனைத்து இருக்கைகளும் வடக்கு நோக்கி உள்ளன. அந்த பிரிவில் முதலில் அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் என்.எஸ்.சிவகுமார் என்றும், உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார்.

அவரிடம் இருந்த பணம் குறித்து கேட்டபோது தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிபார்த்தபோது ரூ.300/- இருந்தது. இது குறித்து விளக்கம் கேட்டபோது தனது சொந்த செலவிற்கு எடுத்து வந்திருந்ததாக கூறியதால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு பணம் ரூ.300/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. அடுத்த இருக்கையில் இருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் வி.ரவி என்றும் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணம் குறித்து கேட்டபோது தனது சட்டை பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணி பார்த்தபோது ரூ.4,300/- இருந்தது. இது குறித்து விளக்கம் கேட்டபோது தனது சொந்த செலவிற்காகவும், வீட்டின் மளிகை பொருட்கள் வாங்குவதற்காகவும் கொண்டு வந்துள்ளதாக கூறியதால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பணம் ரூ.4,300/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. அடுத்து இருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் எம்.ஆனந்த் என்றும், Data Entry Operaterஆக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணம் குறித்து கேட்டபோது தனது சட்டை மேல் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.500/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விளக்கம் கேட்டபோது தனது சொந்த செலவிற்காக வைத்திருந்தாக கூறியதால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.500/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து Engineering பிரிவுக்கு எதிர்புறத்தில் உள்ள சுகாதார பிரிவின் அனைத்து இருக்கைகளும் தெற்கு நோக்கி உள்ளன. அங்கு முதலில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் கே.சீனிவாசலு என்றும் அவர் மேற்படி பிரிவில் உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணம் குறித்து கேட்டபோது தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிபார்த்தபோது ரூ.6,400/- இருந்தது. இது குறித்து விளக்கம் கேட்டபோது தனது சொந்த செலவிற்காக இன்று 03.07.2026 காலை சுமார் 08.25 மணியளவில் ரூ.10,000/- மற்றும் சுமார் 08.26

மணியளவில் ரூ.5,000/-மும் ATM மூலமாக பணம் எடுத்ததாகவும் அதில் செலவு போக மீதமுள்ள பணத்தை கொண்டு வந்திருந்ததாக கூறியதை, அது தொடர்பாக அவரது செல்போனில் உள்ள குறுஞ்செய்தி மூலம் உறுதி செய்யப்பட்டு பணம் ரூ.6,400/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. அடுத்து நின்றிருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் ஆர்.அனுசியா என்றும், உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது தனது கைப்பையிலிருந்து சொந்த பணம் என ரூ.150/- எடுத்து ஆஜர் செய்ததை ஏற்றுக்கொள்ளப்பட்டு பணம் ரூ.150/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. 9) அந்த விசாலமான அறையில் நிர்வாக பிரிவுக்கு எதிர்புறத்தில் நிர்வாக பிரிவில் உள்ள Petition section-ன் அனைத்து இருக்கைகளும் தெற்கு நோக்கி உள்ளன. அங்கு முதலில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் ஆர்.பிரபு என்றும் அவர் மேற்படி பிரிவில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்தும் அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது, அவரிடம் பணம் எதுவும் இல்லை. அதனைத் தொடர்ந்து நிர்வாக பிரிவில் உள்ள Petition sectionக்கு பின்புறத்தில் உள்ள தூய்மைப்பணி பிரிவின் அனைத்து இருக்கைகளும் வடக்கு நோக்கி உள்ளன. அங்கு முதலில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் எப்.தங்கபிரகாஷம் என்றும் அவர் மேற்படி பிரிவில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணம் குறித்து கேட்டபோது தனது சட்டை பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிபார்த்தபோது ரூ.900/- இருந்தது. இது குறித்து விளக்கம் கேட்டபோது தனது சொந்த செலவிற்காக வைத்திருந்தாக கூறியதால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவரிடமே அந்த பணம் ரூ.900/- திருப்பி அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அடுத்த இருக்கையில் இருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் தேவி என்றும் Tax Collecter ஆக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்து அவரிடம்

பணம் குறித்து கேட்டபோது தன்னிடம் பணம் ஏதுமில்லை என்று கூறினார். மெயின் நுழைவு வாயிலுக்கு எதிர்புறத்தில் உள்ள முதுநிலை வருவாய் அலுவலர் அறை கிழக்கு நோக்கி உள்ளன. அங்கு அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் பி.திருநாவுக்கரசு என்றும் அவர் மேற்படி அலுவலகத்தில் மைலாப்பூர் வார்டு 121 முதல் 126 பகுதிக்கு முதுநிலை வருவாய் அலுவலராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்து அவரிடம் பணம் குறித்து கேட்டபோது தன்னிடம் பணம் ஏதுமில்லை என்று கூறினார். அதனை அடுத்து காணப்பட்ட கிழக்கு நோக்கி காணப்பட்ட அறையில் அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் எம்.கோவிந்தராஜ் என்றும் அவர் மேற்படி அலுவலகத்தில் திருவல்லிக்கேனி வார்டு 109, 110, 114, 115, 116, 119 மற்றும் 120 ஆகிய பகுதிக்கு முதுநிலை வருவாய் அலுவலராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணம் குறித்து கேட்டபோது தனது பேண்ட் பாக்கொட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிபார்த்தபோது ரூ.1400/- இருந்தது. இது குறித்து விளக்கம் கேட்டபோது தனது சொந்த செலவிற்காக வைத்திருந்தாக கூறியதால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு பணம் ரூ.1400/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. அடுத்த அறையில் அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் பி.வி.சுரேஷ் என்றும் அவர் மேற்படி அலுவலகத்தில் ஆயிரம் விளக்கு வார்டு 111, 112, 113, 117 மற்றும் 118 ஆகிய பகுதிக்கு முதுநிலை வருவாய் அலுவலராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணம் குறித்து கேட்டபோது தனது பேண்ட் பாக்கொட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிபார்த்தபோது ரூ.1100/- இருந்தது. இது குறித்து விளக்கம் கேட்டபோது தனது சொந்த செலவிற்காக வைத்திருந்தாக கூறியதால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.1100/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. 10) அதனை அடுத்து முதல் தளத்தில் தெற்கு புறத்தில் இருந்த அறையில் மண்டலம்-9 உதவி ஆணையர்

அலுவலகம் வடக்கு நோக்கி உள்ளன. அங்கு இருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் ஏழுமலை என்றும் அவர் மேற்படி அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணம் குறித்து கேட்டபோது தனது சட்டை பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிபார்த்தபோது ரு.360/- இருந்தது. இது குறித்து விளக்கம் கேட்டபோது தனது சொந்த செலவிற்காக வைத்திருந்தாக கூறியதால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் ரு.360/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. அதனை அடுத்து மேற்கு பக்கத்தில் செயற்பொறியாளர்-1 அலுவலக அறை வடக்கு நோக்கி காணப்பட்டது. அங்கு அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் ஜி.வித்யா என்றும் அவர் மேற்படி அலுவலகத்தில் கோட்டம் 112, 113, 117, 122, 123 முதல் 126 பகுதிக்கு பொறுப்பு செயற்பொறியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணம் குறித்து கேட்டபோது தனது கைப்பையிலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிபார்த்தபோது ரு.200/- இருந்தது. இது குறித்து விளக்கம் கேட்டபோது தனது சொந்த செலவிற்காக வைத்திருந்தாக கூறியதால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. அவருக்கு எதிரில் அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் எஸ்.ஜெகதீஸ் என்றும் அவர் மேற்படி அலுவலகத்தில் கோட்டம் 112 பகுதிக்கு உதவி பொறியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணம் குறித்து கேட்டபோது தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிபார்த்தபோது ரு.530/- இருந்தது. இது குறித்து விளக்கம் கேட்டபோது தனது சொந்த செலவிற்காக வைத்திருந்தாக கூறியதால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. 11) மேலும் அந்த விசாலமான அறையின் உள்ளே இன்ஜினியரிங் பிரிவின் அருகே நின்றிருந்த நபரை விசாரித்தபோது, அவர் தனது பெயர் முகமது ரகீம் என்றும் சென்னை கொளத்தூரில்

உள்ள திரு.ராதாகிருஷ்ணன் என்ற சிவில் காண்டிராக்டர் அவர்களிடம் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது, அவர் ஆஜர் செய்ததை எண்ணி பார்த்தபோது பணம் ரூ.8,600/- இருந்தது. மேலும் அவர் தற்போது திரு.ராதாகிருஷ்ணன் அவர்கள் சென்னை ஆற்காடு ரோடு மழைநீர் வடிகால் சிவில் ஒர்க் பணியை செய்து வருவதாகவும், நேற்று தான் பணிபுரியும் நிறுவனத்தின் ஓனர் திரு.ராதாகிருஷ்ணன் மாத சம்பளம் ரூ.25,000/- தனது கொடுத்ததாகவும், அதிலிருந்து மேற்சொன்ன பணம் ரூ.8600/- (Rs.500X17; Rs.100X1) வைத்திருந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் தொடர்பாக அவர் பணிபுரியும் நிறுவனத்தின் ஓனர் திரு.ராதாகிருஷ்ணன் என்பவரிடம் விசாரித்து மேற்சொன்ன நபர் முகமது ரகீம் கூறிய விளக்கம் உறுதி செய்யப்பட்டது. மேலும் அவர் நேற்று தனது செல்போனிலிருந்து தனது மனைவியின் சகோதரர் முகமது சல்மான் என்பவருக்கு G-Pay மூலம் பணம் ரூ.6500/- மற்றும் ரூ.2000/- அனுப்பியதாகவும், அந்த பணத்தை தன்னிடம் முகமது ரகீம் கொடுத்ததாக கூறியதை தொடர்ந்து, அதை உறுதி செய்யப்பட்டதுடன் அந்த பணம் ரூ.8,600/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. 12) மேலும் அந்த விசாலமான அறையின் சுகாதாரத்துறை பிரிவின் அருகே நின்று கொண்டிருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் கோதண்டன் என்றும், இந்த மண்டலம்-9 பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகம் பகுதி-26யில் ஆழ்வார்பேட்டை பகுதி துப்புரவு மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது, அவர் ஆஜர் செய்ததை எண்ணி பார்த்தபோது பணம் ரூ.13,700/- (Rs.500X27; Rs.200X1) இருந்தது. அந்த பணம் குறித்து கேட்டபோது அவர் சம்பள பணம் என்று கூறியதை தொடர்ந்து, அவரது செல்போனை பணம் withdrawal தொடர்பாக ஆய்வு செய்தபோது, எந்த ஒரு குறுஞ்செய்தி இல்லாததாலும் வங்கி கணக்கு விவர ஆதாரங்கள் சமர்ப்பிக்கவில்லை என்பதாலும், அவரது விளக்கம் ஏற்று

கொள்ளப்படவில்லை மற்றும் பணம் ரூ.13,700/- வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 13) மேலும் அந்த விசாலமான அறையின் சுகாதாரத்துறை பிரிவின் அருகே நின்று கொண்டிருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் ஸ்ரீநினிவாசலு என்றும், இந்த மண்டலம்-9 பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தின் பொது சுகாதாரத்துறை பிரிவில் உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது, அவர் ஆஜர் செய்ததை எண்ணி பார்த்தபோது பணம் ரூ.6,400/- (Rs.500X12; Rs.100X4) இருந்தது. அந்த பணம் குறித்து கேட்டபோது அவர் இன்று தனது பேங்க் அக்கவுண்ட்டிலிருந்து ஏடிஎம் மூலம் பணம் ரூ.10,000/- மற்றும் ரூ.5,000/- Withdrawal செய்தது தொடர்பாக அவரது செல்போனில் இருந்த குறுஞ்செய்தியை அவர் காண்பித்ததை தொடர்ந்து, அவரது விளக்கம் ஏற்று கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.6,400/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. 14) மேலும் அந்த விசாலமான அறையின் நிர்வாகப்பிரிவின் நின்று கொண்டிருந்த ஒரு நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் சந்திரசேகரன் என்றும், இந்த மண்டலம்-9 பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவில் டைப்பிஸ்ட் ஆக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது, அவர் ஆஜர் செய்ததை எண்ணி பார்த்தபோது பணம் ரூ.4,300/- (Rs.500X7; Rs.200X1; Rs.100X6) இருந்தது. அந்த பணம் குறித்து கேட்டபோது, அவர் தனது சம்பளத்தில் இருந்து எடுத்த பணம் என்று கூறிய அவரது விளக்கம் ஏற்று கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.4,300/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. மேலும் அலுவலகத்தின் உள்ளே அந்த விசாலாமான அறையின் பொறியியல் துறை பிரிவு, சுகாதாரத்துறை பிரிவு, நிர்வாகத்துறை பிரிவு, வருவாய் துறை பிரிவு, பகுதி கணக்கு குழுமம், முதுநிலை வருவாய் அலுவலர்-1 அலுவலக அறை, முதுநிலை வருவாய் அலுவலர்-2 அலுவலக அறை மற்றும் முதுநிலை வருவாய் அலுவலர்-3 அலுவலக அறைகளிலும் அலுவலக டிராயர் மற்றும் மரத்தினால் ஆன

பீரோ மற்றும் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களின் டேபிள் டிராயர் ஆகியவற்றிலும் சோதனை மேற்கொள்ளப்பட்டது. 15) அதனை அடுத்து இரண்டாம் தளத்தில் இருந்த மாநில உள்ளாட்சி தணிக்கைதுறை அறை வடக்கு நோக்கி உள்ளன. அங்கு முதலில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் ஜெகதீஸ்வரி என்றும் இந்த அலுவலகத்தில் மாநில உள்ளாட்சி தணிக்கைதுறை துணை ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணம் குறித்து கேட்டபோது தனது கைப்பையிலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிபார்த்தபோது ரூ.210/- இருந்தது. இது குறித்து விளக்கம் கேட்டபோது தனது சொந்த செலவிற்காக வைத்திருந்தாக கூறியதால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவரிடமே அந்த பணம் திருப்பி அளிக்கப்பட்டது. அதனை அடுத்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் எ.தமிழ்செல்வன் என்றும், மாநில உள்ளாட்சி தணிக்கைதுறை உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணம் குறித்து கேட்டபோது தனது சட்டை பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிபார்த்தபோது ரூ.160/- இருந்தது. இது குறித்து விளக்கம் கேட்டபோது தனது சொந்த செலவிற்காக வைத்திருந்தாக கூறியதால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு பணம் ரூ.160/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. 16) இந்த இருதுறை கூட்டுத்தணிக்கை சோதனையின் முடிவில் மொத்த பணம் ரூ.1,39,800/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சென்னை-34, நுங்கம்பாக்கம், மண்டலம்-9 பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தின் பல்வேறு பிரிவுகளின் வருகைப் பதிவேடுகள் பின்வருமாறு (1) Health Department Labour attendance (2 sheets), (2) Attendance Register for SE/SO/SI (3 sheets), (3) DEO Attendance register (2 sheets), (4) Staff Attendance Register Data Entry Operator (2 sheets), 5) நிர்வாகப்பிரிவு பணியாளர்கள் தினசரி வருகைப் பதிவேடு (3 sheets), (6) நிர்வாகப்பிரிவு தாமத

வருகைப்பதிவேடு (2 sheets), (7) நிர்வாகப் பிரிவு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தினசரி வருகைப் பதிவேடு (4 sheets), (8) கம்பியில்லா தந்தி காவலாளி தலைமையக மற்றும் மத்திய வட்டார அலுவலக தபால் பணியாளர்கள் வருகைப் பதிவேடு (2 sheets), (9) Establishment Health Department Attendance register (2 sheets), (10) பகுதி கணக்கு குழுமம் பணியாளர்கள் வருகை பதிவேடு(3 sheets), (11) துாய்மை மேற்பார்வையாளர் துாய்மை ஆய்வாளர் வருகை பதிவேடு(3 sheets), (12) வரி மதிப்பீட்டாளர், உரிம ஆய்வாளர், வரி வசூலர் வருகை பதிவேடு(5 sheets), (13) வருவாய்ப் பிரிவு நிர்வாகம் வருகை பதிவேடு (2 sheets), (14) வருவாய்ப் பிரிவு DEO (2 sheets) ஆகியவற்றை இன்றைய தேதியில் (03.07.2026ந்தேதி) பதிவேட்டின் நகல் எடுத்தும் அதில் சம்பந்தப்பட்ட நிர்வாக அலுவலரிடம் சான்றொப்பம் பெறப்பட்டது. இந்த இருதுறை கூட்டு தணிக்கையின்போது இந்த அலுவலகத்தில் உள்ள எந்த ஒரு ஆவணங்களுக்கும் எந்த வித சேதமும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும் அலுவலகத்தின் அன்றாடப் பணிகளுக்கோ பொது மக்களுக்கோ இடையூறு ஏற்படுத்தப்படவில்லை. இந்த திடீர் சோதனை 03.07.2026-ந்தேதி மாலை 4.00 மணிக்கு தொடங்கி இரவு 00.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

ஒப்பம் XX 04.07.26	ஒப்பம் XX 04.07.26	ஒப்பம் XX 04.07.2026	ஒப்பம் XX 04.07.2026
திரு.என்.சௌந்திரராஜன், வேளச்சேரி வட்ட கலால் அலுவலர், வேளச்சேரி வட்டம், சென்னை மாவட்டம்.	திருமதி.வீ.தமிழ்மணி, துணை காவல் கண்காணிப்பாளர், சென்னை நகரப்பிரிவு-3, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை	திரு.சு.வள்ளிநாயகம், காவல் ஆய்வாளர், சென்னை நகரப்பிரிவு-3, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை	திருமதி. அ.சமீனா பானு, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வுப் பிரிவு-2, ஆலந்தூர், சென்னை - 600 016.

ஒப்பம் XX 04.07.26

திரு.ஸ்ரீராமுலு,
கணக்குப்பிரிவு
கண்காணிப்பாளர்,
மண்டலம்-9, பெருநகர
சென்னை மாநகராட்சி
அலுவலகம்

ஒப்பம் XX 04.07.26

திரு.மன்சூர் உசேன்,
மண்டலம்-9 பெருநகர
சென்னை மாநகராட்சி,
பொது சுகாதாரத்துறை
சுகாதார அலுவலர்

ஒப்பம் XX 04.07.26

திரு.ராஜமாணிக்கம்
Partner M/s.SR
Contractors NGO
Colony, Vadapalini,
Chennai.

ஒப்பம் XX 04.07.26

Thiru Hemant Kumar,
No.15/8, Dr.Besant Road,
Triplicane, Ice House,
Chennai-5.

ஒப்பம் XX 04.07.26

திரு.கோதண்டன்,
துப்பரவு
மேற்பார்வையாளர்,
யூனிட்-26,
ஆழ்வார்பேட்டை,
மண்டலம்-9, பெருநகர
சென்னை மாநகராட்சி
அலுவலகம்

ஒப்பம் XX 04.07.26

திரு.திருநாவுக்கரசு,
முதுநிலை வருவாய்
அலுவலர்-1, டிவிஷன்
121-126, மண்டலம்-9,
பெருநகர சென்னை
மாநகராட்சி அலுவலகம்

ஒப்பம் XX 04.07.26

திரு.எம்.கோவிந்தராஜ்,
முதுநிலை வருவாய்
அலுவலர்-2, டிவிஷன்
109-110, 114, 115, 116, 119
மற்றும் டிவிஷன்-120
மண்டலம்-9, பெருநகர
சென்னை மாநகராட்சி
அலுவலகம்

ஒப்பம் XX 04.07.26

திரு.சுரேஷ்குமார்,
முதுநிலை வருவாய்
அலுவலர்-3, டிவிஷன் 111,
112, 113, 117 மற்றும்
டிவிஷன்-118 மண்டலம்-9,
பெருநகர சென்னை
மாநகராட்சி அலுவலகம்

I am registering a case in V&AC Chennai City-III Crime No.01/AC/2026/CC-III U/s 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018 and Section 106 of BNSS (Section 102 Cr.P.C.) against the Accused A-1 to A-5 on 04.07.2026 at 18.30 hrs. The original complaint and FIR is forwarded to the Hon'ble Principal Sessions Judge, Principal Sessions Court, Chennai for the cases under Prevention of Corruption Act and copies of FIR to the officers concerned.

04.07.2026

(S.VALLINAYAGAM)

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Chennai City-III
Alandur, Chennai-600 016